## தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 6

ந.க.எண்.031588/எம்/இ3/2021 , நாள். 12.08.2022

----

பொருள்: பள்ளிக் கல்வி பள்ளிப் பதிவேடுகளில் மாணவ/மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயருக்கு முன்பு இடப்படும் முன்னொட்டை தமிழில் இடுவதற்கு உரிய அரசாணை பெற்றமை – சுற்றறிக்கை அனுப்புதல் – சார்பு

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.140, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1)த் துறை நாள். 02.11.2021
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.015715/W1/இ1/2022, நாள். 24.05.2022

----

பார்வையில் காணும் அரசாணையின் அடிப்படையில், பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே தமிழில் பெயர் எழுதும் போது அதன் முன்னெழுத்தையும் தமிழில் எழுதும் நடைமுறையினை அன்றாட வாழ்வில் கொண்டுவரவும் மாணவர்கள் பள்ளிக்கு சேர அளிக்கும் விண்ணப்பம், வருகை பதிவேடு, பள்ளி, கல்லூரி முடித்து பெறும் சான்றிதழ் வரையில் அனைத்திலும், தமிழ் முன்னெழுத்துடனே வழங்கும் நடைமுறையினை கொண்டு வரவும், மாணவர்கள் கையொப்பமிடும் சூழ்நிலைகள் அனைத்திலும் தமிழ் முன்னெழுத்துடனே கையொப்பமிட அறிவுத்தப்பட்டுள்ளது.

மேலும், முன்னெழுத்தும் தமிழில் கையொப்பமும் தமிழில் என கீழ்க்கண்டவாறு சுவரொட்டிகள் அமைத்து நடைமுறைப்படுத்திடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

> <u>மாணவ மாணவியர்களுக்கு வேண்டுகோள்</u>
>
> பெயரின் முன்னெழுத்தும், கையொப்பமும் தமிழில் இடவும்.

மேலும், பார்வை 2 ல் கண்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதற்கட்டமாக EMIS வழியாக பராமரிக்கப்படும் 30 மின்பதிவேடுகளில் மாணவர் மற்றும் பெற்றோர்கள், பாதுகாவலர் பெயர்களை தமிழில் பெயர் பதிவேற்றம் செய்யும் பொழுது அதன்

முன்னெழுத்தையும் தமிழில் பதிவேற்றம் செய்தல் வேண்டும் என அனைத்து நிலை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

பெறுநர்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

Sent mail
18/8/22
04.54 PM